இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 234 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – பங்குனி 22 – ஞாயிற்றுக்கிழமை 05 ஏப்ரல் 2026 – திருச்சி ★★ 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 234 : Thiruvalluvar Year - 2057 - Panguni 22 - Sunday 05 April 2026 - Trichy ★★ 12 Pages ₹ 5.00

## அனைத்துத் தொகுதி நிர்வாகிகளுடன் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆலோசனை நடத்தினார் !





கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (3.4.2026) அவரது இல்லத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக அனைத்து தொகுதிகளிலும் உள்ள கழக நிர்வாகிகளுடன் கலந்துரையாடினார். இக்கூட்டத்தில் கழக பொதுச் செயலாளர் – அமைச்சர் துரைமுருகன், கழக பொருளாளர் – நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு, கழக முதன்மைச் செயலாளர் – அமைச்சர் கே.என்.நேரு, துணை பொதுச் செயலாளர்கள் அமைச்சர் ஐ.பெரியசாமி, முன்னாள் அமைச்சர் முனைவர் க. பொன்முடி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கனிமொழி கருணாநிதி, திருச்சி சிவா, ஆ.ராசா, அந்தியூர் செல்வராஜ், அமைச்சர் மு.பெ.சாமிநாதன், கழக இளைஞர் அணிச் செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின், கழக சட்டத்துறை செயலாளர் என்.ஆர்.இளங்கோ, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, தலைமைக் கழக நிர்வாகிகள், கழக மாவட்டச் செயலாளர்கள், கழக மாவட்ட நிர்வாகிகள், கழக வேட்பாளர்கள், பகுதி – நகரம் – ஒன்றியம் – வட்டக் கழகச் செயலாளர்கள் மற்றும் தொகுதிக்கான பொறுப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## தலைவர் கலைஞர் பற்றிப் பேச எடப்பாடி பழனிசாமிக்கு யோக்கியதை கிடையாது!

# தமிழ்நாடு தலைநிமிர மலையளவு சாதனைகள் செய்துள்ளோம்!



### நெல்லையில் எல்லையில்லா உற்சாகத்துடன் கூடிய மக்கள் கூட்டத்தில்

### கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் உணர்ச்சிமிகு விளக்கவுரை!

**நெல்லை, ஏப். 5 -**

**சிங்கம் போன்று வாழ்ந்த தலைவர் கலைஞர் பற்றிப் பேச எடப்பாடி பழனிசாமிக்கு தகுதியும் இல்லை; யோக்கியதையும் கிடையாது என்றும்; தமிழ்நாடு தலைநிமிர மலையளவு சாதனைகள் செய்துள்ளோம் என்றும் நெல்லையில் எல்லையில்லா உற்சாகத்துடன் திரண்டிருந்த மக்களிடையே மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து உரையாற்றுகையில் கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டார்.**

**பாளையங்கோட்டை எப்போதுமே தி.மு.க. கோட்டை. எங்கள் தலைவரைப் பற்றிப் பேச பழனிசாமிக்கு எந்த யோக்கியதையும் கிடையாது. அடித்துச் சொல்கிறேன், உங்களால் எந்தக் காலத்திலும் ஆட்சியைப் பிடிக்கவே முடியாது என்றும் கழகத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.**

**கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (3.4.2026) மாலை, திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டையில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தல் பரப்புரைப் பொதுக்கூட்டத்தில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து ஆற்றிய உரை வருமாறு: -**

எப்படிப்பட்ட நெல்லைச் சீமைக்கு நான் இன்றைக்கு வந்திருக்கிறேன் என்றால், இந்திய விடுதலைப் போராட்டத்தில் தனி முத்திரையையும், தமிழ்நாட்டின் வரலாற்றில் மாபெரும் வீரத்தையும், தமிழ் காக்கும் போராட்டத்தில் தலைவர் கலைஞர் அஞ்சாமல் தனிமைச் சிறையில் இருந்த தியாகத்தையும் பெற்றிருக்கும் பாளையங்கோட்டை இருக்கும் நெல்லைச் சீமைக்கு நான் வந்திருக்கிறேன்.

அடிமை அ.தி.மு.க-வின் முதுகில் ஏறி, மதவாத பா.ஜ.க. நிகழ்த்தும் அரசியல் பண்பாட்டுப் படையெடுப்பிலிருந்து தமிழ்நாட்டைக் காக்க உங்கள் ஆதரவைக் கேட்டு நான் வந்திருக்கிறேன்.

தமிழ்நாட்டைக் காக்க நான் ரெடி? நீங்கள் ரெடியா? திராவிட மாடல் 2.0 ஆட்சிக்கு நான் ரெடி? நீங்கள் ரெடியா?

அதற்கு, இந்த மேடையில் இருக்கும் எல்லா வேட்பாளர்களும் வெற்றி பெற வேண்டும்! வெற்றி பெற வைப்பீர்களா?

**மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களை வெற்றி பெறச் செய்வீர்!**

முதலில், இராதாபுரம் தொகுதி. நமது வெல்லும் வேட்பாளர் அப்பாவு அவர்கள். மிக உயர்ந்த மனிதர். பார்ப்பதற்கு மட்டும் உயரமல்ல, தமிழ்நாட்டு சட்டமன்றத்தை நடத்தியும் உயர்ந்தவர். அவர் ஆசிரியராக இருந்த காரணத்தால், மாணவர்களை எப்படி வழிநடத்தினாரோ, அப்படி நம்முடைய திராவிட மாடல் அரசில், சட்டமன்றத்தையும் திறமையாக வழிநடத்தியவர். நான்கு முறை உங்களின் எம்.எல்.ஏ.வாக இருந்து, ராதாபுரம் தொகுதி மக்கள் அவரைப் பாராட்டிப் போற்றி, இன்றைக்கு அவர் வேட்பாளராக நிறுத்தப்பட்டிருக்கிறார். அவருக்கு, ராதாபுரம் தொகுதியில் இருக்கும் உதயசூரியன் சின்னத்தில் உங்களின் பொன்னான வாக்குகளை அளிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, பாளையங்கோட்டை சட்டமன்றத் தொகுதி, வெற்றி வேட்பாளர் மாவட்டச் செயலாளர் அப்துல் வகாப் அவர்கள். பாளையங்கோட்டை எப்போதுமே தி.மு.க. கோட்டை. கடந்த முறை போன்றே, இந்த முறையும் உங்களுக்கு பணியாற்றி ஆதரவு கோரி நிற்கிறார். அப்துல் வகாப் அவர்களுக்கு, உதயசூரியன் சின்னத்தில் உங்களின் பொன்னான வாக்குகளை மீண்டும் வழங்க வேண்டும்.

அடுத்து, திருநெல்வேலி சட்டமன்றத் தொகுதி. நமது வெற்றி வேட்பாளர் மாநகரச் செயலாளர் தம்பி சுப்பிரமணியன் அவர்கள். அமைதியாக தன்னுடைய பணியைச் சிறப்பாகச் செய்யக்கூடிய ஓர் இளைஞர். திருநெல்வேலி தொகுதி மக்கள் சுப்பிரமணியன் அவர்களுக்கு உதயசூரியன் சின்னத்தில் உங்களின் பொன்னான வாக்குகளை வழங்கி அவரை வெற்றி பெற வைக்க வேண்டும்.

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

## தலைவர் கலைஞர் ஒரு சிங்கம்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

**சென்னை, ஏப். 5 –**

**நாக்கில் நரம்பின்றிப் பேசும் பண்பற்ற பழனிசாமி அவர்களே; தலைவர் கலைஞர் ஒரு சிங்கம் என்று கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.**

அவரது பதிவு வருமாமறு:

**தலைவர் கலைஞர் ஒரு சிங்கம்!**

**தோல்வி பயத்தில், நாக்கில் நரம்பில்லாமல் பேசும் பழனிசாமி இனி எந்நாளும் ஆட்சிக்கு வரமுடியாது!**

**தலைவர் கலைஞர் ஒரு சிங்கம்! அந்தச் சிங்கத்தின் பிள்ளை நான். தந்தையாக மட்டுமல்ல, தலைவராக அவரை எந்நாளும் போற்றி வணங்குபவன்!**

**பண்பற்ற பழனிசாமி அவர்களே,**

**தலைவர் கலைஞரும் நானும் மக்களைச் சந்தித்து முதலமைச்சரானவர்கள். உங்களைப் போல, கூவத்தூர் கும்மாளங்களால், கொல்லைப் புறம் வழியாக முதலமைச்சர் பொறுப்பை**



**ஏலத்துக்கு எடுத்தவர்கள் அல்ல!**

**எங்களைப் பற்றிப் பேசும் தகுதி உங்களுக்கு இல்லை! தமிழ்நாட்டுக்கு மக்கள் என்றுமே அந்தத் தகுதியை உங்களுக்கு வழங்க மாட்டார்கள்!**

**மே 4: மக்களின் Judgement Day–வில் உங்களுக்கான தண்டனை கிடைக்கும்!**

இவ்வாறு கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.